# திருத்துறைப்பூண்டி நகராட்சி

## <u>அவசரக் கூட்ட நடவடிக்கைகள்</u>

**திருத்துறைப்பூண்டி நகர்மன்றத்தில் 07.01.2020 செவ்வாய் கிழமை தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட அவசரக் கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை திரு.என்.சந்திரசேகரன்,பி.இ.,**<br>**தனி அலுவலர்,**<br>**திருத்துறைப்பூண்டி நகராட்சி.**

<table>
<tr><th rowspan="2">பொருள் எண்</th><th rowspan="2">பொருள்கள் விபரம்</th><th colspan="2">நகர்மன்றத் தீர்மானம்</th></tr>
<tr><th>தீர்மானம் எண்</th><th>விபரம்</th></tr>
<tr><td>1</td><td>திருத்துறைப்பூண்டி நகராட்சிக்கு 14-வது மத்திய நிதிக்குழு பரிந்துரை 2019-2020 திட்டத்தின்படி ரூ.86.46இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்படி கீழ்க்கண்ட 11 சாலைகளை மேம்படுத்தும் பணிகளை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் ஆய்வுக் கூட்ட உத்தரவின்படி அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிகளை ரூ.87.40இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ளவும், கூடுதலாக ஆகும் செலவினம் ரூ.0.94 இலட்சத்தினை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து செலவிடவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்.</th><th>சாலையின் பெயர்</th><th>மதிப்பீடு (ரூ.இலட்சத்தில்)</th></tr>
<tr><td>1.</td><td>வார்டு-2, ரைஸ்மில் தெருவில் தார்சாலை சீரமைக்கும் பணி</td><td>5.50</td></tr>
<tr><td>2.</td><td>வார்டு 4 ராஜமாணிக்க நாடார் தெருவில் தார்சாலை சீரமைக்கும் பணி</td><td>5.70</td></tr>
<tr><td>3.</td><td>வார்டு 5 பேருந்து நிலைய தார்சாலை சீரமைக்கும் பணி</td><td>10.00</td></tr>
</table>
</td><td>124</td><td>அனுமதிக்கப்பட்டது</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 4. | வார்டு 5 பேருந்து நிலைய குறுக்கு சாலை மற்றும் வார்டு 6 அரசலடி தெரு தார்சாலைகள் சீரமைக்கும் பணி | 8.20 |
| 5. | வார்டு 7 மருத்துவமனை தெரு நேரு நகர் தார்சாலை சீரமைக்கும் பணி | 5.50 |
| 6. | வார்டு 8 பொய்சொல்லா பிள்ளையார் கோவில் தெரு தார்சாலை சீரமைக்கும் பணி | 9.20 |
| 7. | வார்டு 8 காந்தி முதலியார் நகர் தார்சாலை சீரமைக்கும் பணி | 10.00 |
| 8. | வார்டு 9 தெற்கு வீதி தார்சாலை சீரமைக்கும் பணி | 10.00 |
| 9. | வார்டு 15 காமராஜர் தெரு தார்சாலை சீரமைக்கும் பணி | 9.30 |
| 10. | வார்டு 20 திரௌபதையம்மன் கோவில் தெரு மற்றும் வார்டு 22 வளையல்காரத் தெரு தார்சாலை சீரமைக்கும் பணி தார்சாலை சீரமைக்கும் பணி | 4.80 |
| 11. | வார்டு 20 உப்புக்குளத் தெரு தார்சாலை சீரமைக்கும் பணி | 9.20 |
| | கூடுதல் | 87.40 |

**அலுவலக குறிப்பு:** மன்றம் அனுமதி வழங்கலாம்

**(ந.க.எண்.11/2020/எச்-1)**

ஒம்/ ஆணையர்(கூ.பொ.) (ம)
தனி அலுவலர்,
திருத்துறைப்பூண்டி நகராட்சி.

/உண்மை நகல்/

## திருத்துறைப்பூண்டி நகராட்சி

## இயல்பு கூட்ட நடவடிக்கைகள்

**திருத்துறைப்பூண்டி நகர்மன்றத்தில் 31.01.2020 வெள்ளிக் கிழமை தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்ட இயல்பு கூட்ட நடவடிக்கைகள்.**

**முன்னிலை திரு.என்.சந்திரசேகரன்,பி.இ.,**
**தனி அலுவலர்,**
**திருத்துறைப்பூண்டி நகராட்சி.**

| பொருள் எண் | பொருள்கள் விபரம் | நகர்மன்றத் தீர்மானம் | |
|---|---|---|---|
| | | தீர்மானம் எண் | விபரம் |
| 1. | நகராட்சி ஆணையர் அவர்களின் ஜனவரி-2020 மாதத்திற்கான நாட் குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><br>**அலுவலக குறிப்பு** பதிவு செய்யலாம். | 125 | **பதிவு செய்யப்பட்டது** |
| 2. | திருத்துறைப்பூண்டி நகராட்சி நடைமுறையிலுள்ள பயனர் கட்டணத் தொகை தொழில் வகைபாடு அடிப்படையில் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. அதனை சொத்து வரியுடன் இணைத்து வசூலித்திட ஏதுவாக புதிய அளவுகோள்படி வணிக நிறுவனங்களின் வரி விதிப்புக்கு ஏற்ப தொகை நிர்ணயம் செய்ய வேண்டியது அவசியமாக உள்ளது. மேலும், நிர்ணயம் செய்ய வேண்டியது மற்றும் வணிக நிறுவனங்கள் அதன் அமைப்புகளின் பிரதான கோரிக்கையாக பயனர் கட்டணத்தை முறைப்படுத்திட திடக்கழிவு மேலாண்மை பயனர் கட்டணம் கீழ்க்கண்டவாறு நிர்ணயம் செய்திட மன்றத்தின் பார்வைக்கு. | 126 | **அனுமதிக்கப் பட்டது** |

<table>
<tr>
<td></td>
<td>

**<u>உத்தேச பயனர் கட்டணம் அளவு</u>**

<table>
<tr><th>வ.எண்.</th><th>அரையாண்டு வரி விதிப்பு தொகை</th><th>அரையாண்டு சேவைக்கட்டணம் ரூ.</th></tr>
<tr><td>1.</td><td>ரூ.1000/-க்குள்</td><td>120/–</td></tr>
<tr><td>2.</td><td>ரூ.1000/- முதல் ரூ.2000/- வரை</td><td>180/–</td></tr>
<tr><td>3.</td><td>ரூ.2000/- முதல் ரூ.3000/- வரை</td><td>240/–</td></tr>
<tr><td>4.</td><td>ரூ.3000/- க்கு மேல்</td><td>300/–</td></tr>
</table>

மேற்கண்ட அளவுகோள்படி சேவைக் கட்டணம் நிர்ணயம் செய்து வழங்கலாம்.

**அலுவலக குறிப்பு:** அனுமதிக்கலாம்
**<u>(ந.க.எண்.3524/2019/எச்-1)</u>**

</td>
<td></td>
<td></td>
</tr>
<tr>
<td>3.</td>
<td>இந்நகராட்சி தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் திறந்த வெளியில் மலம் கழித்தல் அற்ற நகராட்சி என்று மத்திய அரசால் அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் மேலும் நகரின் தினசரி உற்பத்தியாகும் கழிவறை கழிவுகளை முறைப்படி அகற்றுதல் வழிமுறைகள் அதன் கட்டமைப்பு ஏற்படுத்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு கசடு கழிவு மேலாண்மை திட்டம் (FSTP) ஒதுக்கீடு செய்யப்பட்டு கட்டமைப்பு பணிகள் தொடங்கப்பட்டுள்ளது. இந்நிலையில் நகர் பகுதியில் திறந்தவெளியில் மலம் கழித்தல் முற்றிலும் தடை செய்யப்பட்டு பொதுமக்களின் முழு ஒத்துழைப்போடு நகரில் 1776 வீடுகளுக்கு தனி நபர் கழிப்பறைகள் கட்டி வழங்கப்பட்டு பயன்பாட்டிலுள்ளது. மேலும் நகரில் எந்த ஒரு குடியிருப்பு மற்றும் வணிக பகுதிகளுக்கு ஒரு கிலோ மீட்டர் சுற்றளவில் பொது கழிவறைகள் அமைக்கப்பட்டு பயன்பாட்டிலுள்ளது. எனவே இந்நகராட்சி பகுதியினை திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற கூடுதல் தரம் கொண்ட நகராட்சியாக அறிவித்திட நகர்மன்ற தீர்மானம் இயற்றி பொதுமக்கள் ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபனைகள் பெற்று அதனை பரிசீலித்தும் நகரின் அனைத்து தரப்பு தன்னார்வ அமைப்பு மற்றும் நிறுவனங்களின் தடையின்மை ஒப்புதல் பெற்றும் இந்நகராட்சி பகுதியை திறந்தவெளியில் மலம் கழித்தல் அற்ற கூடுதல் தரம் பெற்ற (ODF++) நகராட்சியாக அறிவித்திட மன்றப்பொருள் அனுமதிக்கு.</td>
<td>127</td>
<td>அனுமதிக்கப் பட்டது</td>
</tr>
</table>

<table>
<tr><td></td><td>அலுவலக குறிப்பு: அனுமதிக்கலாம்<br><u>(ந.க.எண்.127/2020/எச்-1)</u></td><td></td><td></td></tr>
<tr><td>4.</td><td>நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குனர் தஞ்சாவூர் அவர்களின் வரி வசூல் ஆய்வு கூட்டத்தில் வழங்கப்பட்ட அறிவுரைகளின்படி இந்நகராட்சி வரியினங்கள் வசூலை தீவிரப்படுத்தும் பொருட்டு பொதுமக்களுக்கு அறிவிப்பு வாசகத்தை ஆட்டோ ஒலிப்பெருக்கி மூலம் விளம்பரம் செய்ய நாள் ஒன்றுக்கான விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விளம்பர நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ.எண்.</th><th>விலைப்புள்ளி கொடுத்த நிறுவனம் விபரம்</th><th>ஒரு நாள் வாடகை</th></tr>
<tr><td>1.</td><td>ஹரீஷ் பிரபு பப்ளிசிட்டி</td><td>2400/-</td></tr>
<tr><td>2.</td><td>அம்மன் விளம்பர நிறுவனம்</td><td>2500/-</td></tr>
<tr><td>3.</td><td>தேவா பப்ளிசிட்டி</td><td>2300/-</td></tr>
</table>
அலுவலக குறிப்பு:<br>
1. அனுமதி வழங்கலாம்.<br>
2. குறைவான விலைப்புள்ளி அளித்த தேவா பப்ளிசிட்டி நிறுவனத்திற்கு வேலை உத்தரவு வழங்கலாம்.<br>
<u>(ந.க.எண்.245/2020/அ-1)</u></td><td>128</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
<tr><td>5.</td><td>இந்நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை பணி மற்றும் அடிப்படை சுகாதார பணிகள் நல்ல முறையில் மேற்கொள்ளப்பட்டு வரப்படுவதால் தூய்மை இந்தியா திட்டத்தின்படி தூய்மை நகரம் 3 நட்சத்திர அந்தஸ்த்து பெற தகுதி பெற்றுள்ளதால் இந்நகராட்சியை Garbage Free City Three Star தூய்மை நகரம் மூன்று நட்சத்திர அந்தஸ்த்து பெற்ற நகரமாக அறிவித்திட நகர்மன்ற தீர்மானம் இயற்றி பொதுமக்கள் மற்றும் தன்னார்வ அமைப்புகளிடம் தங்கள் ஆலோசனை மற்றும் ஆட்சேபனைகளை பெற்று அதற்கான தீர்வுகள் நிறைவேற்றி Three Star அந்தஸ்த்து மாநில அரசுக்கு அறிவிப்பு வெளியீடு செய்திட மன்றம் அனுமதிக்கு.</td><td>129</td><td>அனுமதிக்கப் பட்டது</td></tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| | **அலுவலக குறிப்பு:** அனுமதிக்கலாம்.<br><br>**(ந.க.எண்.243/2020/எச்-1)** | | |

ஒம்/ ஆணையர்(கூ.பொ.) (ம)
தனி அலுவலர்,
திருத்துறைப்பூண்டி நகராட்சி.

/உண்மை நகல்/